**O.S.261/2015**

Date: 06.02.2024

Pw–2 – சதீஷ்சங்கர்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி (பிரதிவாதி தரப்பில்)**

10) ரேவதி குடியிருந்த வீட்டிற்கு முந்தையதாக வேல்மூப்பனார் என்பவர் இருந்தார். அவர் தற்போது இல்லை. வேலுமூப்பனாருக்கு முன்பு யார் இருந்தார் என்றால் பெயர் தெரியாத தூத்துக்குடியை சேர்ந்த நபர் இருந்தார். அவர் என்ன வேலை பார்த்தார் என்றால் எனக்கு தெரியாது. ரேவதி வீட்டின் வடக்கு சுவர் ரேவதிக்கு சொந்த சுவர் என்றால் இல்லை. அந்த சுவர் எனக்கு சொந்தமான சுவர் ஆகும். மேற்படி சுவருக்கு மேல்நேராக மாடிப்பகுதி உள்ளது என்றால் சரிதான். மாடிப்பகுதி கட்டும்போது நானோ, என் அம்மாவோ ரேவதியை தடுக்கவில்லை என்றால் சரியல்ல, தடுத்தோம். மேற்படி மாடிப்பகுதியை கட்டி முடித்தபின்புதான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அவர்கள் மாடிப்பகுதியை கட்டும்போது நாங்கள் தடுக்கவில்லை என்றும், கட்டி முடித்தபிறகு இடைஞ்சல் செய்கிறோம் என்றால் சரியல்ல.

11) மேற்படி ரேவதி வீட்டின் வடபுற சுவரில் மாடிப்பகுதியை கட்ட ரேவதிக்கு உரிமை உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி வடபுற சுவரின் வடக்கு நெத்தியில் செங்கல் வைத்து கட்டப்பட்டுள்ளது என்றும், பூசவில்லை என்றால் சரிதான். நானும், என் அம்மாவும் மேற்படி வடபுற சுவரின் வடக்கு நெத்தியில் சிமெண்ட் பூசவும், வெள்ளையடிக்கவும் அனுமதிக்கவில்லை. ஏன் அனுமதிக்கவில்லை என்றால் அது எங்களின் சொந்த சுவர் என்பதால் அனுமதிக்கவில்லை. வடக்கு நெத்தியில் சிமெண்ட் பூசினால் எங்களுக்கு நல்லது என்றால் சரியல்ல. எங்கள் வீட்டின் அளவும், பிரதிவாதி வீட்டின் அளவும் சரியாக இருக்கிறது என்றும்,

Sd/-Tr.P.K., PDM(FAC) Sd/- சதீஷ்சங்கர்

கூடுதல் அளவு எதுவும் கிடையாது என்றும், ஆக்கிரமிப்பு எதுவும் கிடையாது என்றால் சரியல்ல.

12) மேற்படி வடபுற சுவரில் எனக்கு உரிமையோ, பாத்தியமோ இல்லை என்றால் சரியல்ல. என் வீட்டில் கழிவுநீர் ஓடை எதுவும் கிடையாது என்றும், அதை வாதி ஆக்கிரமிக்கவில்லை என்றால் சரியல்ல. எங்கள் வீட்டில் வேலுமூப்பனார் இருக்கும்போதே மாடிப்பகுதியில் தொட்டி இருந்தது என்றால் இருந்தது. 2ம் பிரதிவாதி அந்த வீட்டிற்கு வந்தபின்பு அந்த வீட்டையும், தண்ணீர் தொட்டியையும் இடித்துவிட்டு புதிதாக கட்டிடம் கட்டினார் என்றால் சரிதான். இந்த வழக்கு நான் தாக்கல் செய்துள்ள விதத்தில் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

13) ராயப்பிள்ளை என்பவரை எனக்கு நேரில் தெரியாது. அவர் என்ன வேலை பார்த்தார் என்றால் கடை வைத்திருந்தார். நான் அவர் கடையில் சென்று சாமான்கள் வாங்குவேனா என்றால் இல்லை. என்னிடம் ராயப்பிள்ளை 2ம் பிரதிவாதியின் இடத்தில் கடை வைத்திருந்தார் என்று வேலுமூப்பனாரும், அவரது மனைவி மக்களும் என்னிடம் சொன்னார்கள். நான் 10 வயது சிறுவனாக இருந்தபோது சொன்னார்கள். ராயப்பிள்ளை கடை வைத்தது கிடையாது என்றும், நான் சிறுவனாக இருந்தபோது என்னிடம் சொன்ன சங்கதி பொய்யானது என்றால் சரியல்ல. நான் பணத்திற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

14) முதல் விசாரணை வாக்குமூலத்தில் முதல் பக்கத்தில் கழிவு நீர் விட்டு தபசில் சொத்தை ஆண்டனுபவித்து வருவது என் தகப்பனார் சொல்லி எனக்கு தெரியும் என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனவே என் வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

Sd/-**சதீஷ்சங்கர்**

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பித்து சாட்சி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்ட பின்பு என்னால் சான்றொப்பம் இடப்பட்டது.

Sd/-Tr.P.Kumar, 06.02.2024
மு.மா.உ.நீ(மு.கூ.பொ)
அம்பாசமுத்திரம்.